9th August 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எல்லாப் பத்திரிகைகளுக்கும் கொடுக்க முடியும் என்று கூற முடியாது. அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு தகுதியுள்ள பத்திரிகையாக இருந்தால் பார்த்து உதவி அளிக்கப்படும்.

நபி நாயகத்தின் படம்

* 248 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நபிகள் நாயகம் அவர்களின் படத்தை கல்கி பத்திரிக்கையில் வெளியிட்டிருப்பதைக் கண்டித்து அப்பத்திரிகையின்மீது நடவடிக்கை எடுக்கக்கோரி இலங்கையிலிருந்து O.M, கலிபா என்பவரிடமிருந்து சர்க்காருக்கு சமீபத்தில் ஏதேனும் முறையீடு வந்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) இது பற்றி விளக்கம் தருமாறு "கல்கி" ஆசிரியர் கேட்கப்பட்டார். முஸ்லீம் சகோதரர்களது மத உணர்ச்சிகளைப் புண்படுத்துவது நமது நோக்கமல்ல என்றும் கதையின் கருத்தை வலியுறுத்தவே பட விளக்கம் தரப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார். படிப்பவர் உள்ளத்தில் நபிகள் நாயகத்தின் உயர்ந்த கொள்கைகளைப் பதிய வைக்கவேண்டும் என்ற உண்மையான நம்பிக்கையுடனும் உயர்ந்த எண்ணத்துடனும் அப்பட விளக்கம் வெளியிடப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். மற்றும், இத்தகைய தவறு இனி நேராது என்றும் உறுதியளித்துள்ளார். ஆசிரியரின் விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இது பற்றிய விஷயம் முடிவடைந்ததாகக் கருதப்பட்டது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : உருவமற்ற தெய்வத்தை வழிபடக்கூடிய இஸ்லாமிய சகோதரர்களுடைய உள்ளம் இந்தப் படத்தால் புண்பட்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் கல்கி எடிட்டருக்குத் தகவல் தெரிவித்து அந்தப் பத்திரிகை இனிமேல் இத்தகைய படங்களை வெளியிடாது என்ற முறையில் பத்திரிகையில் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று கூற அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் தெரிவித்ததைத்தான் இங்கே தெரிவித்திருக்கிறேன்.

Deputy Inspectors of Schools

* 249 *Q.*—Sri M. S. SELVARAJAN :
Sri G. GOMATHISANKARA DIKSHITHAR : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of posts of School Assistants and Deputy Inspectors, Grade I, in the State;

(*b*) the number among them that are vacant;

(*c*) the dates from which they are so vacant; and

(*d*) the steps taken to fill up the vacancies?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 339.

(*b*) 57.

(*c*) The posts are vacant from various dates ranging from 1st November 1956 to 25th March 1966.

(*d*) As many as 169 vacancies in Grade I posts have been filled up recently on 30th March 1966. The remaining 57 vacancies will be filled up as soon as possible.

திரு. எம். எஸ். செல்வராஜன் : *வெகு நாட்களாக இந்த ஸ்தானங்கள் காலியாக இருக்க ஏதாவது விசேஷ காரணங்கள் இருக்கின்றனவா? அந்தப் பரிட்சாதிகாரிகளுக்குக் கொடுக்கப் பட்டு வரும் சம்பளம் கவர்ச்சிகரமானதாக இல்லையென்ற காரணமா?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தகுதி பெற்றவர்கள் இந்த வேலைக்கு வர வேண்டும். சம்பளம் போதாது என்பது மட்டும் காரணமாக இருக்க முடியாது. வேறு காரணங்களும் இருக்க லாம். சம்பளப் பிரச்சினையைப் பொறுத்தவரை அப்போதைக் கப்போது கவனிக்கப்பட்டு வருகிறது. இதை மாற்றுவது எல்லாம் பே கமிஷன் மொத்தமாகத்தான் கவனிக்கவேண்டும். இப்போது இந்த ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன என்பதைப் பற்றிக் குறிப்பிட்டேன்.

லேபர் கோர்ட்டுகள்

** 250 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :*

(அ) சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களிலுள்ள லேபர் கோர்ட்டுகளில் 1962-ம் ஆண்டு ஜனவரி முதல் 1965 டிசம்பர் வரை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை?

(இ) ஒவ்வொரு ஆண்டிலும், முடிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement [a] is placed on the Table of the House.

திரு. ஆ. தங்கவேலு : *தொழில் கோர்ட்டுகளில் தொழிலாளர் களின் வழக்குகள் இவ்வளவு காலத்திற்குள் முடியவேண்டுமென்று ஏதாவது விதி இருக்கிறதா? இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க வழி செய்யப்படுமா?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கோர்ட்டுகள் நீதிபரி பாலனம் செய்யக்கூடியவை. அரசாங்கம் இன்ன தேதிக்குள் வழக்கை முடிக்க வேண்டுமென்று தாக்கீது அனுப்ப முடியாது.

---

[a] Printed as Appendix II on pages 982–988.